தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

18.10.2012 P.M

19.10.2012 A.M

## இனிப்பல்ல, கசப்பு!

ர்க்கரைத் தொழிலில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பாக ஆலோசனை வழங்க மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட ரங்கராஜன் குழு, ஒரு வாரத்துக்கு முன்பு தனது அறிக்கையைக் கொடுத்தது. சர்க்கரைத் தொழிலில் தற்போது நிலவும் எல்லாக் கட்டுப்பாடுகளையும் தளர்த்த வேண்டும் என்பதுதான் குழுவின் பரிந்துரை.

மாநில அரசு பரிந்துரை (எஸ்ஏபி) விலையை ரத்து செய்துவிட்டு, சர்க்கரை மற்றும் துணை உற்பத்திப் பொருள்களின் மதிப்பில் விவசாயிகளுக்கு பங்கு கிடைக்கச் செய்யலாம்; நியாயவிலைக் கடைகளுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு ஆலையும் சந்தை விலையை விடக் குறைவாக அரசு நிர்ணயிக்கும் விலையில் சர்க்கரையை விற்க வேண்டும் என்கின்ற கடப்பாட்டை நீக்கிவிடலாம்; சணல் பைகளில்தான் சர்க்கரையை மூட்டை கட்ட வேண்டும் என்கின்ற நிபந்தனை தேவையில்லை; சர்க்கரை ஆலைகளுக்கான அரசு நிர்ணயிக்கும் முன்ஒதுக்கீட்டு கரும்புவயல் எல்லைகள் தேவையில்லை; இரு சர்க்கரை ஆலைகளுக்கு இடையே குறைந்தது 15 கிலோமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தேவையில்லை; எரிசாராயத்தை (மொலாசஸ்) வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்வதில் மாநில அரசுகள் தடை விதிக்கக்கூடாது; உள்நாட்டுச் சந்தையில் எவ்வளவு சர்க்கரையை (நான்-லெவி சுகர்) ஆலைகள் விற்கலாம் என்று மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசால் நிர்ணயிக்கப்படும் நடைமுறை தேவை இல்லை. இவையெல்லாம் ரங்கராஜன் குழுவின் பரிந்துரைகள்.

இந்தப் பரிந்துரைகளைப் பார்த்ததும் சர்க்கரை ஆலைகள் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்பு தெரிவித்துவிட்டன. இன்னும் விவசாயத் தரப்பில் இது பற்றி யாரும் பேசத் தொடங்கவில்லை. ரங்கராஜன் குழு பரிந்துரைகள் குறித்து மத்திய அமைச்சரவை விவாதித்து, ஜனவரியிலிருந்து இதை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்தனைக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுவிட்டால், சர்க்கரை ஆலைகளுக்கும் நன்மை, விவசாயிகளுக்கும் நன்மை, நுகர்வோருக்கும் நன்மை என்று சொல்கின்றது ரங்கராஜன் குழு அறிக்கை.

இருப்பினும், முதல் நபராக பாதிக்கப்படப்போவது நுகர்வோர்தான். நியாயவிலைக் கடையில் தற்போது கிலோ ரூ.13.50க்கு ஒரு கிலோ சர்க்கரை கிடைக்கிறது. இந்த நிலைமை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இருக்காது. சர்க்கரை ஆலைகளின் (லெவி சர்க்கரை) கடப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர், மாநில அரசே சர்க்கரை விலையைத் தீர்மானித்துக்கொள்ள அனுமதிக்கப்படும். வெளிச்சந்தை அளவுக்கு அதே விலை இல்லாவிட்டாலும், குறைந்தது ரூ.25 ஆகிலும் தர வேண்டியிருக்கும்.

இரண்டாவது அடி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு! தமிழ்நாட்டில் எல்லா தனியார் சர்க்கரை ஆலைகளும் பெரும் லாபத்தில் செயல்படும்போது, அரசாங்கத்தின் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மட்டும் நட்டத்தில் செயல்படுவது அனைவரும் அறிந்த உண்மை. குழு பரிந்துரை அமலுக்கு வந்தால், ஒரு விவசாயிகூடக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு கொண்டுவந்து போட மாட்டார்.

ஒவ்வொரு கரும்பு ஆலைக்குமான கரும்புவயல்கள் ஒதுக்கீடு எல்லைகள் அகற்றப்பட்டால், தனியார் சர்க்கரை ஆலைகள் எந்தத் தொலைவில் இருந்தாலும் விவசாயியைக் கவர்ந்துவிடும், லாரி வாடகை, வெட்டுக்கூலியை தானே ஏற்று, கரும்பை எடுத்துச் சென்றுவிடும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அரசுத்தனமான அதிகாரிகளால் ஒன்றும் செய்ய முடியாது. நட்டம் அதிகரித்துக் கடைசியில் தனியாருக்கு அவை தாரை வார்க்கப்படும், அல்லது இழுத்து மூடப்படும்.

இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கு இடையே 15 கிலோமீட்டர் இடைவெளி வேண்டும் என்ற நிபந்தனையும் நீக்கப்பட்டுவிட்டால், அவ்வளவுதான். கூட்டுறவு சர்க்கரை ஆலை பக்கத்திலேயே தனியார் சர்க்கரை ஆலையை 3 மாதங்களில் நிறுவி, சிறப்பாக நடத்துவார்கள்.

மூன்றாவது அடி "குடிமகன்'களுக்கு! சர்க்கரை ஆலைகளின் எரிசாராயத்தைப் பெற்று மதுபானம் தயாரிப்பது மிகவும் செலவு குறைந்தது. தற்போது தமிழ்நாட்டில் எரிசாராயத்தை வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்ல தடை உள்ளது. ஆகவே எரிசாராயம் குறைந்த விலையில் தமிழகத்தில் கிடைக்கிறது. எரிசாராயத்தை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம் என்று மத்திய அரசு சட்டம் கொண்டுவந்தால், தமிழக அரசுக்கு சுங்க வரி கிடைக்கும். ஆனால் ஆலைகள் வைத்ததுதான் எரிசாராயத்தின் விலையாக இருக்கும். விளைவு? மதுபானத்தின் விலையைத் தமிழக அரசு கூட்டும்.

கடைசியாக, இந்தப் பரிந்துரையால் விவசாயி நன்மை அடைவாரா நட்டம் அடைவாரா என்பதுதான் கணிக்க முடியாததாக இருக்கிறது.

மத்திய அரசு அறிவிக்கும் கொள்முதல் விலையை மட்டும் விவசாயிகளுக்கு ஆலைகள் தந்தால் போதுமானது. அதன் பின்னர், சர்க்கரை மற்றும் துணை உற்பத்தியான எரிசாராயம், கரும்புச் சக்கை, சர்க்கரைக்கழிவுகள் ஆகியவற்றின் ஆலைக்கு வெளியிலான சந்தை மதிப்பை மாநில அரசு தீர்மானிக்கும். இந்த மதிப்பின்படி, விவசாயி கொடுத்த கரும்பின் சர்க்கரைத் திறனுக்கு ஏற்ப, 70% விவசாயிக்கும், 30% ஆலைக்கும் கிடைக்கும் என்கின்றது குழு பரிந்துரை. இந்த அணுகுமுறை விவசாயிகளைக் குழப்பும்.

எரிசாராயத்தின் அளவையும் கரும்புச் சக்கை அளவையும் ஆலைகள் குறைத்துக் காட்ட அதிக வாய்ப்பு உள்ளது. சர்க்கரைக்கழிவு என்பது சர்க்கரையை வெள்ளையாக மாற்றப் பயன்படுத்திய ரசாயனங்களின் கழிவு. அதை உரமாக மாற்றலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், அதற்குச் சந்தை இல்லை.

ஆலைகள் கரும்புச் சக்கைகளை எரித்து, மின்உற்பத்தி செய்து பயன்படுத்துகின்றன. இந்த மின்சாரத்தைத் தேவைக்குப்போக மீதியை மின்தொகுப்புக்கு விற்கலாம். இத்தனை விவகாரங்களையும் மாநில அரசு சரியாக மதிப்பிடும் என்று நம்ப முடியுமா? அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் கைகோத்து விவசாயிகளின் நலனை பலி கொடுத்துத் தனியார் லாபம் கொழிக்க உதவ மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

சர்க்கரை பொதுமக்களையும், விவசாயிகளையும் தவிர ஏனையோருக்கு எல்லாம் இனிக்கிறது!

## அதிகபட்சமாக குடவாசலில் 80 மி.மீ. மழை

தமிழகத்தில் அதிகபட்சமாக வியாழக்கிழமை காலை வரை திருவாரூர் மாவட்டம் குடவாசலில் 80 மில்லி மீட்டர் மழை பதிவானது; சென்னையில் 70 மில்லி மீட்டர் மழை பெய்தது.

வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

குடவாசல் (திருவாரூர் மாவட்டம்) 80; வலங்கைமான் (திருவாரூர் மாவட்டம்), சென்னை - 70; மயிலாடி (கன்னியாகுமரி மாவட்டம்), கும்பகோணம் - 60; காட்டுமன்னார் கோயில் (கடலூர் மாவட்டம்), பாளையங்கோட்டை(திருநெல்வேலி மாவட்டம்), மாதவரம் (திருவள்ளூர் மாவட்டம்), நீடாமங்கலம் (திருவாரூர் மாவட்டம்), மணிமுத்தாறு (திருநெல்வேலி மாவட்டம்), ஆர்.எஸ்.மங்கலம் (ராமநாதபுரம் மாவட்டம்), சிவகிரி (திருநெல்வேலி மாவட்டம்) - 50;

செங்கோட்டை (திருநெல்வேலி மாவட்டம்), சேரன்மாதேவி (திருநெல்வேலி மாவட்டம்), அரியலூர், கௌம்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்), திருக்கோவிலூர் (விழுப்புரம் மாவட்டம்), திருவிடைமருதூர் (தஞ்சாவூர் மாவட்டம்), திருவாரூர், மன்னார்குடி, - 40; அம்பாசமுத்திரம், ஆயக்குடி, சங்கரன்கோயில், தென்காசி, ராதாபுரம் (திருநெல்வேலி மாவட்டம்), பேச்சிப்பாறை (கன்னியாகுமரி மாவட்டம்), பாபநாசம், ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்), நாங்குநேரி, சாத்தான்குளம் (தூத்துக்குடி மாவட்டம்), சோழவந்தான் (மதுரை மாவட்டம்), திருச்செந்தூர், பரங்கிப்பேட்டை (கடலூர் மாவட்டம்), கன்னியாகுமரி, திருவையாறு (தஞ்சாவூர் மாவட்டம்), உடுமலைப்பேட்டை (திருப்பூர் மாவட்டம்) - 30; சிதம்பரம் (கடலூர் மாவட்டம்),விருதுநகர், நாகர்கோவில், ராஜபாளையம் (விருதுநகர் மாவட்டம்), திருமங்கலம் (மதுரை மாவட்டம்), உளுந்தூர்பேட்டை (விழுப்புரம் மாவட்டம்),

குளித்துறை (கன்னியாகுமரி மாவட்டம்), ஸ்ரீவைகுண்டம் (தூத்துக்குடி மாவட்டம்), மணப்பாறை (திருச்சி மாவட்டம்), கொள்ளிடம், (நாகப்பட்டினம் மாவட்டம்), புள்ளம்பாடி (திருச்சி மாவட்டம்), வானூர் (விழுப்புரம் மாவட்டம்), பொன்னேரி (திருவள்ளூர் மாவட்டம்), முத்துப்பேட்டை (திருவாரூர் மாவட்டம்), அரிமலம் (புதுக்கோட்டை மாவட்டம்), கோவில்பட்டி, வேடசந்தூர் (திண்டுக்கல் மாவட்டம்), பூதப்பாண்டி(கன்னியாகுமரி மாவட்டம்), அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்), குளச்சல் (கன்னியாகுமரி மாவட்டம்) - 20; மதுரை, சேத்தியாத்தோப்பு (கடலூர் மாவட்டம்), செங்கல்பட்டு, கரம்பக்குடி (புதுக்கோட்டை மாவட்டம்), தேவகோட்டை (சிவகங்கை மாவட்டம்), பூந்தமல்லி (திருவள்ளூர் மாவட்டம்), தாம்பரம் (காஞ்சிபுரம் மாவட்டம்), குன்னூர் (நீலகிரி மாவட்டம்), மதுக்கூர் (தஞ்சாவூர் மாவட்டம்), தேனி , சிவகாசி, பொள்ளாச்சி, விளாத்திக்குளம் (தூத்துக்குடி மாவட்டம்), விழுப்புரம்,அதிராமபட்டினம் (தஞ்சாவூர் மாவட்டம்), கடவூர் (கரூர் மாவட்டம்), ஒட்டப்பிடாரம் (தூத்துக்குடி மாவட்டம்), தொழுதூர் (கடலூர் மாவட்டம்), பூண்டி (திருவள்ளூர் மாவட்டம்), சமயபுரம் (திருச்சி மாவட்டம்),செந்துறை (அரியலூர் மாவட்டம்), பெருங்கலூர் (புதுக்கோட்டை மாவட்டம்), கரூர் பரமத்தி (கரூர் மாவட்டம்), சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்), காரைக்கால், தம்மம்பட்டி(சேலம் மாவட்டம்), கொடைக்கானல் (திண்டுக்கல் மாவட்டம்), மணியாச்சி (தூத்துக்குடி மாவட்டம்), மருங்காபுரி (திருச்சி மாவட்டம்),மதுராந்தகம் (காஞ்சிபுரம் மாவட்டம்), மாயனூர் (கரூர் மாவட்டம்), பெரியகுளம் (தேனி மாவட்டம்), பாம்பன் (ராமநாதபுரம் மாவட்டம்), வத்திராயிருப்பு (விருதுநகர்

மாவட்டம்), அரூர்(தருமபுரி மாவட்டம்), லால்குடி (திருச்சி மாவட்டம்), பாப்பிரெட்டிப்பட்டி (தருமபுரி மாவட்டம்), ஸ்ரீவில்லிப்புத்தூர் (விருதுநகர் மாவட்டம்), கரூர், பாண்டிச்சேரி, கூடலூர் (தேனி மாவட்டம்), மரக்காணம் (விழுப்புரம் மாவட்டம்), நாகப்பட்டினம் - 10.

## மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு மேலும் குறைப்பு

காவிரி டெல்டா பகுதிகளில் பாசனத் தேவை குறைந்ததால், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு வியாழக்கிழமை மாலை வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது.

கடந்த மாதம் 17-ஆம் தேதி முதல் மேட்டூர் அணையிலிருந்து சம்பா நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. பருவமழை சரியாகப் பெய்யாததாலும், கர்நாடகம் தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வழங்காததாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது.

நீர்வரத்தைவிட டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருந்ததால் அணையின் நீர்மட்டம் மளமளவெனக் குறைந்து வந்தது. இந்த நிலையில், மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நீர்மட்டம் சரிவிலிருந்து மீண்டது. புதன்கிழமை நீர் திறப்பு வினாடிக்கு 15 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. வியாழக்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 62.90 அடியாக இருந்தது. நீர்வரத்து வினாடிக்கு 7,489 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 26.89 டி.எம்.சியாக இருந்தது.

## விவசாயிகளுக்கு மண்புழு வளர்ப்புப் பயிற்சி

புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மண்புழு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையத்தில் கடந்த இரு நாள்களாக அளிக்கப்பட்ட பயிற்சிக்குப் பிறகு, அதன் தலைவர் ஜி.சுரேஷ் சான்றிதழ்களை அளித்தார். நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.வசந்தகுமார், புதுச்சேரி விவசாயத் தொழிலாளர் நலச்சங்க முதன்மைச் செயல் அலுவலர் முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதுச்சேரியில் விவசாயத் தொழிலாளர்களுக்காக அரசால், புதுச்சேரி விவசாயத் தொழிலாளர் நலச் சங்கம் 2005ம் ஆண்டு தொடங்கப்பட்டது.இதில், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 35,275 விவசாயத் தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான வேளாண் பயிற்சிகள், புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் அளிக்கப்பட உள்ளன.

முதல்கட்டமாக, 1,050 தொழிலாளர்களுக்கு மண்புழு உரம் தயாரிப்பு, காளான் வளர்ப்பு, நெல் விதை உற்பத்தி, காய்கறி, மரவள்ளி, கரும்பு பயிர்களின் விதை உற்பத்தி, அலங்காரச் செடிகள் உற்பத்தி, நெல்லில் இயந்திரமயம், துல்லிய பண்ணையத் திட்டம், அலங்கார மீன் வளர்ப்பு, மாடு,

கோழி வளர்ப்பு, காய்கறிகளுக்கு மதிப்பூட்டுதல் போன்ற பயிற்சிகள் 2013 ஜனவரி வரை அறிவியல் நிலையத்தில் அளிக்கப்பட உள்ளன. இதன் ஒரு பகுதியாக முதல் கட்டமாக, மண்புழு வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு மேலும் குறைப்பு

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு 15 ஆயிரம் கன அடியாக புதன்கிழமை குறைக்கப்பட்டது.

காவிரி பிரச்னை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் காவிரியில் தண்ணீர் திறப்பதை கர்நாடகம் நிறுத்தியுள்ளது. இந்த நிலையில் மேட்டூர் அணையின் நீர்பிடிப்புப் பகுதி, தருமபுரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் செவ்வாய்க்கிழமை காலை சுமார் 6 ஆயிரம் கன அடியாக இருந்த நீர் வரத்து, மாலையில் திடீரென 15 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது.

இந்த நிலையில் புதன்கிழமை காலை இது 14 ஆயிரம் கன அடியாக குறைந்து, மாலை 4 மணி நிலவரப்படி 13,496 கன அடியாக இருந்தது. இதற்கிடையே டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் மழையால் அணையில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு மேலும் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்பு வரையிலும் வினாடிக்கு 18 ஆயிரம் கன அடியாக திறக்கப்பட்ட நீரின் அளவு செவ்வாய்க்கிழமை 16 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

இது புதன்கிழமை 15 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது. மழையால் வயல்வெளிகளில் தண்ணீர் நிரம்பியிருக்கும் என்பதால் பாசனத்துக்கு தண்ணீர் தேவைப்படாது. இதனால் தொடர்ந்து மழை பெய்ய நேர்ந்தால் தண்ணீர் திறப்பு மேலும் குறைக்கப்பட வாய்ப்பு இருப்பதாக பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ரூ.33 கோடியில் நவீன வணிக வளாகம்: தினசரி சந்தை கடைகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

நாமக்கல் நகராட்சி ரூ.33.34 கோடியில் அமைக்க உள்ள நவீன வணிக வளாகம், தினசரி சந்தையில் கடை தேவைப்படுவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.

பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே வணிக வளாகம், தினசரி சந்தையின் தேவையை அறிந்து அரசு நிதி ஒதுக்கீடு செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் சேலம் -திருச்செங்கோடு சாலை சந்திப்பு அருகே சுமார் 4.5 ஏக்கர் பரப்பளவில் தனியார் வணிக வளாகங்களுக்கு இணையான நவீன வசதிகளுடன் கூடிய வணிக வளாகமும், தினசரி சந்தையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் சார்பில் அமைய உள்ள இந்த நவீன வணிக வளாகம் கட்ட ரூ.22.97 கோடியும், தினசரி சந்தைக்கு ரூ.10.37 கோடியும் என மொத்தம் ரூ.33.34 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வணிக வளாகம், காய்கறி சந்தை வளாகம் கட்டுவதற்கு முன்னரே கடைகளை ஏலம் விடுவ தன் மூலம் வணிக வளாகத்துக்கு வைப்புத்தொகையாக ரூ.8.40 கோடியும், தினசரி சந்தை வளாகத்துக்கு ரூ.1.93 கோடியும் என மொத்தம் ரூ.10.32 கோடி திரட்ட முடியும் என்றும், மீதித்தொகையை அரசிடம் இருந்து கடனாகப் பெற்று அமைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நவீன வணிக வளாகம், தினசரி சந்தைக்கான கருத்துருக்கள் தமிழக உள்ளாட்சித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ந்து, அரசு சார்பில் நிதி ஒதுக்கீடு செய்வ தற்கு முன்னதாக வணிக வளாகம, தினசரி சந்தையின் அவசியம் குறித்து அரசு சார்பில் கோரப்பட்டுள்ளது. இதையடுத்து, நவீன வணிக வளாகம் மற்றும் தினசரி சந்தையில் கடை கள் தேவைப்படும் பெரிய நிறுவனங்கள் முதல் வியாபாரிகள் வரை அனைத்துத் தரப்பினரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை http://municipality.tn.gov.in/namakkal என்ற இணையதளம் மற்றும் அஞ்சல் வழியாகவும் அனுப்பலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நகராட்சித் தலைவர் ஆர்.கரிகாலன் செய்தியாளர்களிடம் கூறியது. வணிக வளாக கடைகளுக்கு சதுர அடிக்கு ரூ.1000 வீதம் வைப்புத்தொகையும், சதுர அடிக்கு ரூ.30 வீதம் வாடகையும் உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோல், தினசரி சந்தையில் கடைகளுக்கு வைப்புத் தொகை சதுர அடிக்கு ரூ.500ம், வாடகை சதுரஅடிக்கு ரூ.15ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புத்தொகையும், வாடகைத் தொகையும் முன் பொது ஏலத்தின் மூலம் உயரக்கூடும்.

வேறெந்த நகராட்சி, மாநகராட்சி பகுதிகளிலும் அமைக்கப்படாத வகையில் முதன்முறையாக நாமக்கல் நகரில் மிக நவீன மற்றும் அனைத்து வசதிகளுடன் இந்த வணிகவளாகம், தினசரி சந்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

எம்எல்ஏ கே.பி.பி.பாஸ்கர், நகராட்சி ஆணையர் செழியன், பொறியாளர் கமலநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

18th oct 2012 P.M

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.15, சென்னையில் ரூ.3.15.

கறிக்கோழி

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.57, முட்டைக் கோழி கிலோ ரூ.55.

## வாழையில் நூற்புழு மற்றும் பனாமா வாடல் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்!

வாழைகளில் நூற்புழுக்கள் மற்றும் நோய்கள் அதிகளவு சேதம் விளைவிக்கின்றன. நூற்புழுக்களால் வாழையில் 10 முதல் 50 சதம் வரை மகசூல் குறைப்பு ஏற்படுகின்றன.

இந்த நோய்களின் அறிகுறிகள் பற்றியும், அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றியும் பையூர் வேளாண் மண்டல ஆராய்ச்சி நிலைய உதவி பேராசியர்கள் பூர்ணிமா மற்றும் கி.மணி ஆகியோர் கூறியது:

தமிழகத்தில் தோட்டக்கால் பூமிகளிலும், மலைச் சரிதல்களிலும் பயிரிடப்படும் வாழைகளிலும் நூற்புழுக்கள் மற்றும் நோய்கள் சேதத்தை விளைவிக்கின்றன. வாழையைத் தாக்கும் நூற்புழுக்களில், வேர் அழுகல் நூற்புழு, வேரைக் குடையும் நூற்புழு, சுருள்வடிவ நூற்புழு, வேர் முடிச்சு நூற்புழு ஆகிய முக்கியமானவையாகும்.

3000 புழுக்கள் ஒரு கன்றுக்கு என்ற அளவில் 50 சதம் பாதிப்பு உண்டாக்குகிறது. இப்புழுக்களின் தாக்குதலால் மரங்கள் வளர்ச்சி குன்றியும், இலைகளின் எண்ணிக்கை குறைந்தும் மஞ்சள் நிறமாகியும் காணப்படும். பூ பூத்தல் மற்றும் குலை தள்ளுவதில் தாமதம் காணப்படும். பழங்களின் எண்ணிக்கை குறைந்து அதன் அளவு சிறியதாகி விடுகிறது.

வேர்கள் கருமை அல்லது சிவப்பு நிற அழுகலோடும், வேர் முடிச்சுக்களோடும் காணப்படும். வேர்கள் அழுகிவிடுவதால் மரங்கள் நிலத்தில் வேர் ஊன்றி நிற்க முடியாமல் காற்றில் சாய்ந்து விடும். இத்தகைய சேதத்தினால் இறுதியில் வாழையின் மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

வேரிலும், கிழங்குகளிலும் காயங்கள் ஏற்பட்டு எளிதில் உள்புகுவதால், பனாமா வாடல் நோய் தாக்க நேரிடும். வாடல் நோயின் அறிகுறி முதலில் முதிர்ந்த இலைகளில் காணலாம். இந்த நோய் தாக்கப்பட்ட மரங்களில் இலைகள் முதலில் மஞ்சள் நிறமாக மாறி வாடி விடும். இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குள் அனைத்து இலைகளும் மஞ்சள் நிறமாக மாறி உதிர்ந்து விடும். வாழை மரத்தினை இரண்டாக வெட்டிப் பார்த்தால் பழுப்பு மற்றும் சிவப்பு கோடுகளுடன் அழுகிய மீன் வாடை வீடும். வாழையின் அடித்தண்டு பகுதி வெடித்தும் காணப்படும்.

கட்டுப்படுத்தும் வழிகள்: நூற்புழு மற்றும் நோய் பாதிக்கப்பட்ட கன்றுகளை நடுவதால் வாழையில் நூற்புழுக்கள் மற்றும நோய் பரவுகின்றன. இதை தடுப்பதற்கு, கிழங்குகளில் உள்ள நூற்புழுக்களை அகற்றுவதே மிக முக்கியம். நூர்புழுக்க்ள் உள்ள கிழங்குகள் கருமை அல்லது சிவப்பு நிற அழுகலோடு காணப்படும். இதில் பல ஆயிரக்கணக்கான நூற்புழுக்கள் தங்கியிருக்கும். இந்த அழுகள் சுமார் 2 முதல் 3 செ.மீ ஆழம் வரை கிழங்குகளில் பரவியிருக்கும், இந்த அழுகிய பகுதிகளை சீவி, கிழங்குகள் வெள்ளை நிறமாக தோன்றும்படி செய்வதன் மூலம் பெரும்பாலான நூற்புழுக்கள் அகற்ற முடியும்.

சீவிய கிழங்குகள் களிமண் குழம்பில் (மண் 1, நீர் 3) அல்லது சாணி கரைசலில் நனைத்து புயூரடான் கருணை மருந்தினை 40 கிராம் அளவு தூவி நட வேண்டும். இம்முறை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்ததாகும். இதன் சிறப்பு முத்தடிப்பு, அதாவது நூற்புழு, கூன்வண்டு, அசுவினி இழை மூன்றிலிருந்தும் 3 முதல் 4 மாதம் வாழையைக் காப்பாற்றலாம்.

எஞ்சிய நூற்புழுக்களை அழிக்க மானோகுரோட்டோபாஸ் 36 சதம் பூச்சி கொல்லி கரைசலில் (1.5மி,லி 1லிட்டர் நீர்) நனைத்து நடலாம்.

வாழையின் பனாமா வாடல் நோயை கட்டுப்படுத்த வேர்ப்பகுதியில் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நோய் தாக்கிய வாழையை அப்புறப்படுத்தி குழியில் சுண்ணாம்பு போட வேண்டும்.

வாழை நடும் போது கார்பன்டாசிம் 1 கிராம் 1 லிட்டர் நீரில் நனைத்து பின்பு மாதம் இரு முறை மேற்கூறிய கரைசலை வாழையை சுற்றி ஊற்றுவதன் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்தலாம். மேலும், நுண்ணியிர் கொல்லியான சுடோமோனாஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி இட்டும் கட்டுப்படுத்தலாம். தொடர்ந்து வாழையை பயிரிடாமல், வாழைக்குப்பின் நெல் பயிரிடுவதன் மூலம் நூற்புழுக்களை தவிர்க்கலாம். 45 நாள்களில் பசுந்தாள் பயிரான சணப்பை பயிரை ஊடுபயிராக இட்டு பூப்பதற்கு முன் வேருடன் பிடுங்கி மண்ணில் இட்டு கலக்காலம். மேலும் வாழை நடும் போது கன்றுக்கு சுமார் 250 கிராம் வேப்பம்புண்ணாக்கை இடுவதன் மூலம்

மண்ணின் தரத்தை உயர்த்துடன் நூற்புழுவையும் கட்டுப்படுத்த முடியும். இந்த வழிமுறைகளை பயன்படுத்தி வாழையை நோயிலிருந்து தவிர்த்து நல்ல மகசூலை பெறலாம்.

## "பூச்சிக்கொல்லி மருந்துகளால் பறவைகள் அழிகின்றன'

பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதால், ஏராளமான பறவை இனங்கள் அழிகின்றன என்று சுற்றுச்சூழல் ஆர்வலர் கோவை சதாசிவம் கூறினார்.

அவிநாசி அருகேயுள்ள செம்மாக்கவுண்டன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் சார்பில் காட்டுயிர் வார விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, பள்ளித் தலைமை ஆசிரியர் ஆ. காந்திமதி, தமுஎகச அவிநாசி பகுதிச் செயலாளர் வே. தினகரன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

இதில், தமுஎகச மாநிலக் குழு உறுப்பினரும், சுற்றுச்சூழல் ஆர்வலருமான கோவை சதாசிவம் பேசியது:

பறவைகள்தான் இயற்கையான பூச்சிக்கொல்லிகள். ஆனால், நாம் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பறவைகள், மண்புழுக்கள், பட்டாம்பூச்சிகள், தேன் பூச்சிகள் ஆகியவற்றையும் சேர்த்தே அழித்து விடுகின்றன.

உழவர்களுக்கு நன்மை தரக் கூடியவையும் அழிந்து, நாம் உண்ணும் உணவும் நஞ்சாகிறது.

ஒரு பறவை அழிந்தால் ஒரு தாவர இனம் காணாமல் போகும் என்பது அறிவியல் உண்மை. எனவே, அழிந்து வரும் பறவை இனங்களை வரும் தலைமுறைக்காக காப்பாற்ற வேண்டும். ஒவ்வொருவரும் பறவையினத்தைக் காக்க உறுதிமொழி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

இதில் அழிந்து வரும் பறவைகள், காடுகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறும்படங்கள் திரையிடப்பட்டன. ஆசிரியர்கள் ச.மு. ரமேஷ்குமார், ஆனந்தகுமார், சாந்தாமணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.1.36 கோடி

நடம்பு சம்பா பருவம் மேட்டூர் அணை செப்டம்பர் 17-ல் திறக்கப்பட்டதை முன்னிட்டு, தாமதமாக தொடங்குவதால் சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 8 அம்ச சம்பா சிறப்பு தொகுப்பு மானிய திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

பரங்கிப்பேட்டை வட்டாரத்துக்கு இத்திட்டத்துக்காக ரூ.1.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தி: நேரடி விதைப்புக்கு உழவு மானியம், 50 சதவீத மானியத்தில் களைக்கொல்லி, சமுதாய நாற்றங்கால்கள், 75 சதவீத மானியத்தில் நுண்ணுரம், 75 சதவீத மானியத்தில் உயிர் உரங்கள், அடியுர மானியம், 75 சதவீத மானியத்தில் ஜிங்க்சல்பேட் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மண்ணின் உவர் தன்மையை அகற்றும் ஜிப்சம் ஒரு ஹெக்டேருக்கு 500 கிலோ வீதம் பரிந்துரைக்கப்படுகின்றன. இதனை அடியுரமாகவும், மேலுரங்கள் இடும்போதும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

எனவே பரங்கிபேட்டை விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் சம்பா சிறப்புத் தொகுப்பு திட்ட மானிய உதவிகளைப் பெற்று உற்பத்தியையும், லாபத்தையும் பெருக்கி கொள்ளலாம் என வேளாண் உதவி இயக்குநர் சு.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

## கரும்பு சாகுபடியில் அதிக லாபம்

நவீன கரும்பு சாகுபடி மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என வேளாண்துறை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் தெரிவித்தார்.

திருக்கோவிலூர் அருகே தேவரடியார்குப்பம் கிராமத்தில் நவீன கரும்பு சாகுபடி குறித்து பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. முகையூர் வட்டார வேளாண்மைத்துறை, மதராஸ் சர்க்கரை ஆலை ஆகியவை இணைந்து இந்த முகாமை நடத்தியது. வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் முகாமுக்கு தலைமை வகித்தார்.

முகாமில் சர்க்கரை ஆலை முதுநிலை மேலாளர் பாலகிருஷ்ணன் பங்கேற்று பேசியதாவது:

கரும்பு சாகுபடியில் உற்பத்தி திறனை ஏக்கருக்கு 80 முதல் 100 டன் என்ற அளவில் உயர்த்திடும் வகையில், நீர்ப்பாசனம், கரும்பு நாற்றுகளை நடவுச் செய்தல் உள்ளிட்ட நவீன திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நவீன கரும்பு சாகுபடியில், சாகுபடி பரப்பு அதிகரித்தால்தான் கரும்பு அறுவடை இயந்திரங்களை ஆலை நிர்வாகம் அறிமுகப்படுத்திட முடியும். எனவே, விவசாயிகள் நவீன கரும்பு சாகுபடி முறைகளில் அதிக ஆர்வம் செலுத்திட வேண்டும் என்றார் அவர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார்: திருக்கோவிலூர் வட்டத்தில் விவசாயிகள் நெல், மணிலா, கம்பு போன்ற சாகுபடியில், சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி உள்ளனர்.

முகையூர் வட்டாரத்தில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி நடைபெற்று வருகிறது.

கரும்பில் ஏக்கருக்கு 35 முதல் 45 டன் என்ற அளவில் மகசூல் எடுப்பதால் போதுமான லாபம் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. ஆனால், நவீன தொழில்நுட்பங்களான நீடித்த நிலையான கரும்பு சாகுபடி, சொட்டுநீர்ப் பாசனம், அகலபார் முறையில் சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி போன்ற தொழில்நுட்பங்களை கடைபிடித்திடும் முன்னோடி விவசாயிகள், ஏக்கருக்கு 80 முதல் 100 டன் மகசூல் எடுத்து ஏக்கருக்கு ரூ.1 லட்சம் லாபம் பெறுகின்றனர்.

நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்திட, விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை மற்றும் சென்னை சர்க்கரை ஆலை இணைந்து 12 கிராமங்களில் நிழல் வலைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கரும்பு நாற்றுகள் தேவைப்படும் விவசாயிகள், அந்தந்தப் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் கரும்பு கள அலுவலர்களிடம் பதிவு செய்து பயன்பெறலாம். கரும்பு நாற்றுகளாக நடவு செய்திருந்தால் விவசாயிகளுக்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக அறுவடை செய்யப்படுகிறது. கரும்பில் ஊடுபயிராக மணிலா, பயறுவகைப் பயிர்கள், தர்ப்பூசணி, காய்கறிப் பயிர்கள் போன்ற பயிர்கள் இரண்டு போகம் சாகுபடி செய்திட இம்முறையில் வாய்ப்புள்ளது என்றார் அவர்.

ஆத்மா திட்டத் தலைவர் கங்காதரன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 16 டன் ஊட்டி தேயிலையை விற்க இலக்குஆட்சியர் தகவல்

விழுப்புரம் மாவட்டத்தில் ஊட்டி தேயிலை 16 ஆயிரம் டன் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்தார்.

மாவட்டத்தில் ஊட்டி தேயிலை விற்பனை குறித்து கூட்டுறவு ரேஷன் கடை விற்பனையாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு வங்கியில் புதன்கிழமை காலை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தலைமை வகித்து பேசியது:

நீலகிரி தேயிலை தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பித்து, தொழிலாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் வேலைவாய்ப்பை உருவாக்கவும் ஊட்டி டீ நேரிடையாக கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் பொது விநியோகத் திட்டம் மூலம் ரேஷன் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

÷இந்தத் தேயிலை விற்பனை அதிகரிக்க ரேஷன் கடை விற்பனையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். மகளிர் குழுவினர் மூலம் பூமாலை வணிக வளாகங்க விற்பனை நிலையங்கள், ஆவின்

பால் பொருட்கள் விற்பனை நிலையங்கள், ஊட்டி தேயிலை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

÷இலக்காக மாதம் 16 ஆயிரம் டன் விற்பனை செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிக தேயிலை விற்கும் விற்பனையாளருக்கு பரிசு வழங்கப்படுகிறது என்றார்.

÷மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பிருந்தா தேவி முன்னிலை வகித்தார். கூட்டுறவு இணைப்பதிவாளர் ஆர். பாலகிருஷ்ணன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராஜகணேஷ், ஆவின் பொதுமேலாளர் எஸ். சுந்தரேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கரும்பு விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

உசிலம்பட்டி அருகே உள்ள முத்துப்பாண்டிபட்டி கிராமத்தில் கரும்பு விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, தனியார் சர்க்கரை ஆலை உதவி பொதுமேலாளர் எம். தங்கராஜ் தலைமை வகித்தார். கரும்பு அதிகாரி மாதவமணிக்குமார் தொடங்கி வைத்தார். கரும்பு உதவியாளர்கள் மகேந்திரன், வெங்கடேஷ் ,ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், முன்னோடி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

உதவியாளர் முருகன் நன்றி கூறினார். கரும்பு உற்பத்தியை அதிகரிப்பது, கரும்பு விவசாயத்தை நவீனமாக்குதல், சொட்டுநீர்ப் பாசனம், கரும்பு பட்டத்தில் பயிர் செய்வது குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

## 12 இடங்களில் கால்நடை  பாதுகாப்புத் திட்ட முகாம்

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தேனி மாவட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் அக்.19-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை, 12 இடங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெற உள்ளது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

போடி ஒன்றியம் சூலப்புரம், தேனி ஒன்றியம் திருச்செந்தூர் காலனி, க.மயிலை ஒன்றியம் பொன்னம்மாள்பட்டி ஆகிய இடங்களில் அக். 19-ம் தேதியும், கம்பம் ஒன்றியம் ஆணைகெஜம், ஆண்டிபட்டி ஒன்றியம் கே. காமாட்சிபுரம் ஆகிய இடங்களில் அக். 20-ம் தேதியும், சின்னமனூர் ஒன்றியம் மூர்த்திநாயக்கன்பட்டியில் அக். 22, போடி ஒன்றியம் கெப்புரங்கன்பட்டியில் அக். 26, ஆண்டிபட்டி ஒன்றியம் அய்யனத்தேவன்பட்டி, கம்பம் ஒன்றியம் பளியங்குடி, சின்னமனூர்

ஒன்றியம் வெம்பக்கோட்டை, போடி ஒன்றியம் அம்மாபட்டி ஆகிய இடங்களில் அக். 27, போடி ஒன்றியம் குண்டலநாயக்கன்பட்டியில் அக். 30 ஆகிய தேதிகளில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெறுகின்றன.

முகாமில் கால்நடைகளுக்கு சுண்டுவாத அறுவைச் சிகிச்சை, குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், கோழி கழிசல் தடுப்பூசி போடுதல் ஆகிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் இதில், விவசாயிகளுக்கு தீவனப் புல் வளர்த்தல், தாது கலவை தயாரித்தல் குறித்தும் ஆலோசனை வழங்கப்படும், என்று அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

19.10.2012 A.M

**வேளாண், தோட்டக்கலை அதிகாரிகளுக்கு விதை உற்பத்தி குறித்து பயிற்சி முகாம்**

ஈரோடு: பவானி, அம்மாபேட்டை வட்டாரங்களைச் சேர்ந்த வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு சான்று விதைகள் உற்பத்தி குறித்து ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது.

ஈரோடு விதைச்சான்று உதவி இயக்குனர் மகாதேவன் தலைமை வகித்து பேசியதாவது:

விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968ன்படி உற்பத்தி செய்யப்படுகிறது. விதைச் சான்றளிப்புத் துறை மூலம் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கிறது. தமிழகத்தில் சான்று விதை உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று பெற்ற விதைகள் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

இவ்வாறு அவர் பேசினார்.

ஈரோடு விதைச்சான்று அலுவலர் மோகனசுந்தரம், விதைப்பு அறிக்கை பதிவு செய்தல், பதிவு கட்டணம், பகுப்பாய்வுக் கட்டணம் செலுத்துதல், வயல் ஆய்வின்போது கவனிக்க வேண்டியவை, பயிர் விலகு தூரம், நோய்கள், கலன்கள், விதைப்பண்ணை தள்ளுபடியாகாமல் இருக்க கவனிக்க வேண்டியவை, முத்திரையிட்டு விதைச் சுத்திகரிப்பு நிலையத்துக்கு விதைக் குவியல்களை அனுப்புதல் ஆகியவை குறித்துப் பயிற்சியளித்தார்.

பெருந்துறை விதைச் சான்று அலுவலர் சிவக்குமார், விதைக்குவியல்களை சுத்தி செய்தல், மாதிரி எடுத்தல், சான்றட்டைகள் பெறுதல், சான்றட்டைகளை அச்சிடுதல், பொருத்துதல், உற்பத்தியாளர் அட்டையில் அச்சிடப்பட வேண்டியவை, கொள்கலன்களில், அச்சிடப்பட வேண்டியவை, விதைகளை இருப்பு வைக்கும் முறைகள் ஆகியவை குறித்துப் பயிற்சியளித்தார். உதவி இயக்குனர்கள், வேளாண்மை அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பவானி உதவி விதை அலுவலர் கந்தசாமி நன்றி கூறினார்.

**தோகையை பயன்படுத்தினால் இரட்டிப்பு மகசூல்:கரும்பு விவசாயிகளுக்கு வேளாண் துறை யோசனை**

கோபிசெட்டிபாளையம்: கரும்பு சீஸன் என்பதால், தோகைகளை பயன்படுத்தி இரட்டிப்பு பயன்களை பெறலாம், என கோபி வேளாண்மை துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:

கரும்பு உற்பத்தி திறனில் தமிழகம் ஏக்கருக்கு சராசரியாக, 42 டன் பெற்று முதலிடத்தில் உள்ளது. இருந்த போதிலும் கடந்த, 20 ஆண்டுகளாக கரும்பு உற்பத்தியில் குறிப்பிடதக்க முன்னேற்றத்தை அடைய இயலவில்லை. பல்வேறு தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தியும், விவசாயிகளின் பாரம்பரிய சாகுபடி முறைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தியும், கரும்பு மகசூலை உயர்த்த பல்வேறு ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடக்கிறது.

கரும்பு பயிரில் ஒரு பருவத்தில் ஒரு ஏக்கருக்கு ஐந்து டன் வரை உலர்ந்த இலைகள் கிடைக்கின்றன. இதில், 28.6 சதவீதம் கிரம சத்தும், 042 சதவீதம் தழை, 0.15 சதவீதம் மணி, 0.50 சதவீதம் சாம்பல் சத்துக்களும் உள்ளன. உலர்ந்த கரும்புத் தோகைகள் மண்ணோடு கலப்பதால் மண்ணில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் தன்மை மேம்படுகிறது. மண்ணின் அடர்த்தி குறைந்து அங்ககத்தன்மை அதிகரிக்கிறது.

உலர்ந்த கரும்புத்தோகைகளை நீளமாக இருப்பதால், அப்படியே நிலத்தில் இடும்போது உடனடியாக மக்குவது இல்லை. கரும்பு வெட்டிய வயல்களில் குவியல், குவியலாக கரும்பு தோகைகள் பரவி கிடக்கும்போது வயலை முழுவதும் மூடிவிடுகிறது. வறட்சி காலத்தில் நீர் பற்றாகுறை இருக்கும்போது, கரும்பு தோகையால் மூடப்பட்ட வயல்களில், 15 நாட்கள் வரை ஈரம் காயாமல் வைக்கப்படுகிறது. கரும்பில் மகசூல் குறைவுக்கு தண்ணீர் பற்றாகுறை முக்கிய காரணமாக கருதப்படுவதால் இந்த முறை மேலும் முக்கியத்துவம் பெறுகிறது.

கரும்பு வெட்டப்பட்ட வயல்களில் கிடக்கும் தோகைகளை அப்படியே தீ வைத்து எரிக்கும் பழக்கம் இருந்தது. அப்படி செய்வதால் வயலில் உள்ள கோடிக்கணக்கான நம்மை செய்யும் நுண்ணுயிரிகளும், பூச்சிகளும் தீயில் சிக்கி அழிந்து விடுகின்றன. கந்தகம், தழை, கரிமச்சத்துகளும் எரிந்து வீணாகிறது. தீ வெப்பத்தில் கரும்பு அடிக்கட்டைகள் யாவும் கடும் சூடாக்கப்பட்டு மறுதாம்பு பயிரின் முளைப்புத்திறன் வெகுவாக பாதிப்படைகின்றன. மேல் வேர்களும் வெந்து விடுகின்றன. பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கிறது.


கரும்பு தோகையை தீ வைத்து அழிக்காமல், அப்படியே வயலில் விட்டு விடுவதால் இயற்கையாக வயலில் மூடாக்கு போடப்பட்டு, நீர் ஆவியாவது தடுக்கப்பட்டு கரும்பு அடிக்கட்டையின்

முளைப்புத்திறனும் பாதுகாக்கப்படுகிறது. அனைத்துக்கும் மேலாக சில மாதங்களில் மக்கும் ஐந்து டன்கள் கரும்பு தோகை அடுத்த பயிருக்கு அற்புதமான இயற்கை உரமாகிறது. மக்கிய கரும்பு தோகையில், 0.5 தழை, 0.2 மணி, 1.1 சதவீதம் சாம்பல் சத்துக்களும், ஏராளமான நுண்ணுயிரிகளும் உள்ளன.

தவிர, முதல் மூன்று மாதங்களுக்கு கரும்பு வயலில் தோன்றும் களைகளும் கரும்புத் தோகை மூடாக்கால், பெரிதும் குறைந்து விடுகின்றன. வழக்கமான கரும்பு பயிரை தாக்கும் இளங்கருத்து புழுவின் சேதமும் குறைகிறது.

சுற்றுச் சுழலை பாதுகாக்க கூடிய இந்த கரும்புத்தோகை மூடாக்கு முறையினை கோபி வட்டாரத்தில் உள்ள பெரிய கொரவம்பாளையம், நாகதேவன்பாளையம், பொலவகாளிபாளையம், புதுக்கரைபுதூர் உள்ளிட்ட கிராமங்களில் ஏராளமான விவசாயிகள் பரலவாக கடைப்பிடித்து வருகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## ஆலைகள் மக்காச்சோள மாவு உற்பத்தியை குறைத்தன



பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -மக்காச் சோளம் விலை உயர்வால், சோள மாவு ஆலைகள், அவற்றின் உற்பத்தியை, 30 சதவீதம் வரை குறைத்துள்ளன.மக்காச் சோளத்தில் இருந்து தயாரிக்கப்படும் மாவு, ஜவுளி, மருந்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், திரவ, திட உணவுப் பொருட்களில் சுவை சேர்ப்பதற்காகவும், இறுகும் தன்மைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாண்டு துவக்கத்தில், உச்சத்தில் இருந்த மக்காச் சோளத்தின் விலை, பின்னர் வெகுவாக சரிவடைந்தது. கடந்த ஜூன் மாதம், ஒரு குவிண்டால் மக்காச் சோளம் விலை, 1,100 ரூபாயாக

குறைந்தது.ஆனால், பருவமழை தாமதம் காரணமாக, மீண்டும் மக்காச் சோளத்தின் விலை உயர்ந்தது. ஆகஸ்ட் கடைசியில், ஒரு குவிண்டால் மக்காச் சோளம் விலை, 43 சதவீதம் உயர்ந்து, 1,500 ரூபாயாக அதிகரித்தது.

இதனால், மக்காச் சோளத்திற்கான தேவை குறைந்த நிலையில், மழை பெய்ததை அடுத்து, அதன் விலை, 16 சதவீதம் வரை சரிவடைந்தது. இருப்பினும், இந்த விலை சரிவு என்பது, தற்காலிகமானது தான் என, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.இந்நிலையில், சோள மாவு, குளுகோஸ் உள்ளிட்ட பொருட்களுக்கான தேவையும் குறைந்து உள்ளது."இது போன்ற காரணங்களால், சோள மாவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான நிறுவனங்கள், அவற்றின் உற்பத்தி திறனில், 70 சதவீத அளவிற்கே இயங்குகின்றன' என, இந்திய மாவு உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் விஷால் மஜித்தியா தெரிவித்தார்.குறிப்பாக, ஜவுளி ஆலைகள், சோள மாவுக்கான ஆர்டர்களை குறைத்து விட்டதாக, அவர் மேலும் கூறினார்.சோளம் விலை உயர்வு காரணமாக, மருந்து நிறுவனங்களுக்கு குளுகோஸ் விற்பனை செய்து வந்த பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இவை, ஒரு கிலோ மக்காச் சோளத்தின் விலை, 11 ரூபாயாக இருக்கும் போது, ஒரு கிலோ குளுகோசை 22 ரூபாய்க்கு விற்பனை செய்வதற்காக, மருந்து நிறுவனங்களுடன் நீண்டகால அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தன.ஆனால், ஒரு கிலோ மக்காச் சோளத்தின் விலை, திடீரென 15 ரூபாயாக உயர்ந்து, பின்னர் 13.50 ரூபாய் வரை குறைந்ததால், ஏற்கனவே ஒப்புக்கொண்ட விலையிலேயே, குளுகோசை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய இழப்பை சந்தித்த பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. மக்காச் சோளத்தின் விலை, அதிக ஏற்ற, இறக்கமாக உள்ளதால், பல சோள மாவு ஆலைகள், மருந்து நிறுவனங்களுடன் ஓராண்டுக்கு விற்பனை செய்வதற்காக ஒப்பந்தம் செய்து கொள்வதை தவிர்த்து வருகின்றன.மக்காச் சோளம் பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளதும், காலதாமத மழையும், அதன் விலை உயர்வுக்கு வழிவகுத்துள்ளது. இத்துடன், மக்காச் சோளத்திற்கான ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்துள்ளதாலும், அதன் விலை உயர்ந்துள்ளது.அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு, 56 ஆக இருந்தபோது, மக்காச்சோளத்தின் ஏற்றுமதி விலை, டன்னுக்கு, 15 ஆயிரம் ரூபாயாக இருந்தது.தற்போது, அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு, 53 ரூபாயாக குறைந்துள்ளதால், ஏற்றுமதியாளர்களின் கணக்கும் மாறியுள்ளது.இது குறித்து, பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு ஏற்றுமதியாளர் கூறும்போது,"ரூபாய் மதிப்பு உயர்ந்துள்ளதால், நிகர லாபம் குறைந்து, ஏற்றுமதியும் சரிவடைந்துள்ளது. மக்காச் சோளம் விலை உயர்ந்திருந்தபோது,

அவற்றை கொள்முதல் செய்துள்ளதால், இந்த இழப்பை எதிர்கொள்ள முடியவில்லை' என்று தெரிவித்தார்.நடப்பாண்டு கரீப் பருவ, மக்காச் சோள உற்பத்தி, 1.49 கோடி டன்னாக இருக்கும் என, மத்திய வேளாண் அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு, இதே காலத்தில், 1.62 கோடி டன்னாக இருந்தது.நாட்டின் பல சந்தைகளில், தற்போது, ஒரு டன் மக்காச் சோளம், 12 ஆயிரம் ரூபாய் முதல், 13,750 ரூபாய் வரை விற்பனையாகிறது.

## உற்பத்தி செலவு உயர்வால் தேயிலை துறையில் பாதிப்பு



கொச்சி: நாடு தழுவிய அளவில், உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால், தேயிலை நிறுவனங்களின், லாப வரம்பு பாதிக்கப்பட்டுள்ளதாக, தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.கடந்த ஓராண்டில், உரங்களின் விலை மூன்று மடங்கு அளவிற்கும், நிலக்கரி விலை, டன்னுக்கு 2,000 ரூபாய் வரையிலும் உயர்ந்துள்ளது.இவை தவிர, தொழிலாளர்களுக்கான ஊதியமும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இது போன்ற காரணங்களால், தேயிலை நிறுவனங்களின் லாப வரம்பு மிகவும் பாதித்துள்ளது. குறிப்பாக, ஒரு கிலோ தேயிலை உற்பத்திக்கான செலவு, 140 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டில், 115 ரூபாய் என்ற அளவில் இருந்தது.இந்நிலையில், நாட்டின் பல பாகங்களில், தேயிலை உற்பத்தியும் குறைந்துள்ளது. இதுவும், தேயிலை நிறுவனங்களின் லாப வளர்ச்சியில் அதிக, தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நாட்டின் எள் உற்பத்தி 2.71 லட்சம் டன்னாக குறையும்



பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -சென்ற செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த, கரீப் பருவத்தில், நாட்டின் எள் உற்பத்தி, 27 சதவீதம் சரிவடைந்து, 2.71 லட்சம் டன்னாக குறையும் என, இந்திய எண்ணெய் வித்துக்கள் மற்றும் அது சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் மதிப்பீடு (ஐ.ஓ.பி.இ.பி.சி.,) செய்துள்ளது.அதேசமயம், நாட்டின் கரீப் பருவத்தில், எள் உற்பத்தி, 2.20 லட்சம் டன் என்ற அளவிற்கு மேல் அதிகரிக்க வாய்ப்பில்லை என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

உத்தர பிரதேசம்மதிப்பீட்டு பருவத்தில், குஜராத், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில், 14 லட்சம் ஹெக்டேரில், எள் சாகுபடி பயிரிடப்பட்டுள்ளன. இருப்பினும், செப்டம்பரில் பெய்த அடை மழையால், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில், எள் பயிர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில், இதன் உற்பத்தி, அதிகபட்சமாக, 87 ஆயிரம் டன் என்ற அளவில்தான் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இதையடுத்து, மத்திய பிரதேசம் (80,030 டன்), உத்தர பிரதேசம் (76,205 டன்), குஜராத் (27,511 டன்) ஆகிய மாநிலங்கள் இடம்பெறும் என, ஐ.ஓ.பி.இ.பி.சி., அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. அதேசமயம், குஜராத் மாநிலத்தில், எள் வித்துக்கள் உற்பத்தி, 22 ஆயிரம் டன் முதல் 25 ஆயிரம் டன் வரையில்தான் இருக்குமென, வர்த்தகர்கள் தெரிவித்தனர்.எள் வித்துக்கள் உற்பத்தி குறையும் என்ற மதிப்பீட்டை அடுத்து, சென்ற ஆண்டில், 2.50 லட்சம் டன்னாக இருந்த இதன் ஏற்றுமதி, நடப்பாண்டில், 1.50 லட்சம் டன்னாக குறையும் என, அம்ரேலியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.கரீப் பருவத்தில் ஏற்பட்ட, மோசமான பருவநிலை காரணமாக, கோடை கால எள் விதைப்பு பணிகள் சரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. குஜராத்தில் உள்ள சவுராஷ்டிராவின் பெரும்பாலான பகுதிகளில்,

தண்ணீர் பற்றாக்குறை மற்றும் முறையான பாசன வசதி இல்லாதது போன்றவற்றால், இம்மாநிலத்தில், எள் உற்பத்தி, 10 ஆயிரம் டன் அளவிற்கே இருக்கும் என, வர்த்தகர்கள் மதிப்பிட்டுள்ளனர். இது, கடந்த ஆண்டில், 40 ஆயிரம் டன்னாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

கடந்த ஒருவாரத்தில், எள் வித்துக்கள் விலை, குவிண்டால் ஒன்றுக்கு, 1,000 ரூபாய் அதிகரித்துள்ளது.பல நாடுகள் இந்தியாவிலிருந்து எள்ளை இறக்குமதி செய்து கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், ஒரு குவிண்டால், எள் விலை, 11 ஆயிரம் முதல் 11,100 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. என@வ, இதன் விலை உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## மத்திய பட்ஜெட் மதிப்பீட்டை விட உணவு மானியம் உயர்ந்தது



பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து- மத்திய அரசின் உணவு மானியம், ஆறு மாதங்களுக்குள்ளாகவே, நடப்பு 2012-13ம் நிதியாண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டை விட உயர்ந்துள்ளது. இது, முழு நிதியாண்டிற்குள், எரிபொருள் மானியச் செலவை விட விஞ்சும் என, எதிர்பார்க்கப்படுகிறது.பொது வினி@யாக திட்டம் மத்திய அரசு, விவசாயிகளிடம் இருந்து உணவு தானியங்களை கொள்முதல் செய்து, அவற்றை குறைந்த விலையில், பொது வினியோக திட்டம் மூலம், மக்களுக்கு வழங்கி வருகிறது.இதன்படி, நடப்பு 2012-13ம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், உணவு மானியச் செலவு, 75 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என, தெரிவிக்கப்பட்டிருந்தது.இந்நிலையில், சென்ற ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான, முதல் அரையாண்டில், உணவு மானியம், 1,01,879 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, முழு நிதியாண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டை விட, 36 சதவீதம் அதிகமாகும்.மத்திய அரசு, தற்போதைய நிலவரப்படி, உணவு மானியத்திற்காக, 61,978 கோடி ரூபாய்

ஒதுக்கியுள்ளது.விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு, உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தியுள்ளது. இதனால், உணவு தானியங்களின் கொள்முதல் செலவு உயர்ந்துள்ளதாக, பொதுத் துறையை சேர்ந்த இந்திய உணவுக் கழக (எப்.சி.ஐ.,) அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.மேலும், எப்.சி.ஐ., கிடங்குகளில், உணவு தானியங்களின் கையிருப்பு அதிகரித்துள்ளதாலும், கடந்த நிதியாண்டில் நிலுவையில் உள்ள மானியம் காரணமாகவும், உணவு தானிய மானியச் சுமை அதிகரித்துள்ளதாக, அவர் மேலும் கூறினார்.தற்போது, மதிப்பிடப்பட்டுள்ள, 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான உணவு மானியத்தில், கடந்த நிதியாண்டின் மானிய நிலுவைத் தொகை 22,008 கோடி ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு நிதியாண்டில், உணவு மானிய நிலுவை, 39,909 கோடி ரூபாயாக உயரும் என, எப்.சி.ஐ., மதிப்பிட்டுள்ளது.மத்திய அரசு, நடப்பு நிதி ஆண்டிற்கு, கடந்த நிதியாண்டை விட, கூடுதலாக 15 சதவீத நெல்லை கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகிய பெட்ரோலியப் பொருட்களுக்கான மானியத்தை விட, உணவு மானியச் சுமை அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.எண்ணெய் நிறுவனங்கள், அடக்க விலைக்கும் குறைவாக பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்வதால், நடப்பு நிதியாண்டில், 1,67,415 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், மத்திய அரசின் மானியம், 43,800 கோடி ரூபாயாக இருக்கும் என, முன்பு கணிக்கப்பட்டிருந்தது.ஆனால், இந்த மதிப்பீட்டை விட, மத்திய அரசின் மானியச் சுமை உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு, நடப்பாண்டில் ஒதுக்கிய, 43,800 கோடி ரூபாய், கடந்த நிதியாண்டின், மானிய நிலுவையை தீர்க்க, பயன்பட்டுள்ளது.கிடங்கு வசதிஇந்நிலையில், போதுமான கிடங்கு வசதியின்றி, உணவு தானியங்கள் வீணாவதை தடுக்கவும், அவற்றின் கொள்முதல் அதிகரித்து வருவதால், கையிருப்பை குறைக்கவும், மத்திய அரசு முடிவு செய்துள்ளது.இதையடுத்து, வரும் டிசம்பருக்குள், ஈரானுக்கு இரண்டு லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## கடைபோக உருளை கிழங்குக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு

ஊட்டி: "நீலகிரி மாவட்டத்தில் கடைபோக உருளை கிழங்குக்கு நல்ல விலை கிடைக்கும்,' என தோட்டக்கலை துறை தெரிவித்துள்ளது.மாவட்ட தோட்டக்கலை துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு;உலகின் தானியமல்லாத உணவுப்பொருள் வரிசையில் உருளைக்கிழங்கு முதலிடம் வகிக்கிறது. 2010ம் ஆண்டு உலக அளவில் 18.65 மில்லியன் எக்டேரிலிருந்து, 324.42

மில்லியன் டன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் 2011-12ல் உருளைக்கிழங்கு 18.10 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 413 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் உத்திரபிரதேசம், மேற்குவங்காளம், பஞ்சாப், பீகார் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் 80 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றன. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி 2011-12ல், தமிழகத்தில் 2,950 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 62 ஆயிரத்து 940 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.தமிழகத்தில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களில் மலை பிரதேசங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. கடைபோகமான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் விதைப்பு செய்து டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படுகிறது.விவசாயிகள் கடைபோக விதைப்பு முடிவுகளை எடுப்பதற்கு உருளைக்கிழங்கு அறுவடையின்போது கிடைக்கும் விலை நிலவரம் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். அதிக உற்பத்தி செலவு, வேலை ஆட்கள் பற்றாக்குறை மற்றும் வெளி மாநிலங்களின் வரத்தினால் நீலகிரி விவசாயிகளுக்கு குறைந்த விலை கிடைத்தது. இதனால், விவசாயிகள் மற்ற மலைப்பிரதேச காய்கறி பயிர்களுக்கு மாறியுள்ளனர். இதன் விளைவாக குறைந்த பரப்பளவும் கூடவே பயிர்சேதமும் ஏற்பட்டதால் மேட்டுப்பாளையம் சந்தையில் உருளைக்கிழங்குக்கு அதிக விலை கிடைத்தது. டிசம்பர் 2012ல் முதல் புதிய கிழங்கு வரத்து துவங்கும். எனினும், பண்டிகை கால தேவை, கர்னாடகாவில் இருந்து தொடர்ச்சியாக வரத்து இல்லாமை, ஏற்றுமதி தேவை ஆகியவை கிழங்கின் விலையில் ஏற்றத்தை கொண்டு செல்லும்.தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் உள்ள வேளாண்மை ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய கடந்த 22 ஆண்டு (1999-2012) உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது.அதன்படி கடைபோக உருளைக்கிழங்கு அறுவடையின்போது (டிசம்பர்2012, ஜனவரி 2013) அன்று கிலோவிற்கு 20 முதல் 22 ரூபாய் வரை விலை கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விலையை கருத்தில் கொண்டு உருளைக்கிழங்கு சாகுபடி செய்யுமாறு தோட்டக்கலை பரிந்துரைத்துள்ளது. மேலும், விபரங்களுக்கு கோவையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் உள்ள உள்நாட்டு மற்றும் சந்தை தகவல் மைய அதிகாரிகளை 0422-2431405 என்ற எண்ணிலோ, ஊட்டி

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் 0423-2442170 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு தோட்டக்கலை துறை செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

## வெளிர் மஞ்சள் நிறத்தில் மிளகாய்

பந்தலூர்: பந்தலூர் அருகே எருமாடு பகுதியில் வெளிர் மஞ்சள் நிறத்தில் விளைந்துள்ள மிளகாய் மக்களை கவர்ந்து வருகிறது.நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு வகையான காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது. அதிலும் மிளகாய் வகைகளும் உற்பத்தி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பஜ்ஜி மிளகாய், குடை மிளகாய், மூட்டை மிளகாய், பச்சைமிளகாய் என வகை, வகையான மிளகாய்களுக்கு மத்தியில் வெளிர் மஞ்சள் நிறத்தில் வளர்ந்து வரும் மிளகாய் பார்வையாளர்களை கவர்ந்து வருகிறது. இந்த மிளகாய் நல்ல காரத்துடனும், சுவையுடன் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.பச்சை மிளகாய்க்கு மத்தியில் மஞ்சள் நிறத்தில் காய்த்துள்ள மிளகாய் மக்களை வியப்படைய செய்தது. சிறு விவசாயி ராஜன் கூறுகையில்,"" இது போன்ற மிளகாய் கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. அதன் எல்லையில் உள்ள எருமாடு பகுதியில் தற்போது இதற்கு நல்ல கிராக்கி உள்ளது," என்றார்.

## விவசாயிகள் குறை தீர்க்க இன்று கூட்டம்

அரியலூர்: மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் இன்று நடக்கிறது. இதுகுறித்து அரியலூர் கலெக்டர் செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கை: அரியலூர் கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில், இன்று காலை, 11 மணிக்கு, விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடக்கிறது. வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், வேளாண் கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படவுள்ள இக்கூட்டத்தில், விவசாயிகள் பங்கேற்று, தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

## தொடர்ந்து மழை விவசாயிகள் மகிழ்ச்சி

புதுக்கோட்டை: மாவட்டத்தில் பலத்த மழை பெய்துவருவதால் மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள், சம்பா நெல் சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டதால் வரலாறு காணாத வறட்சி நிலவியது. நீர் நிலைகள் அனைத்தும் வறண்டு விட்டதால், குறுவை நெல் சாகுபடி

வெகுவாக பாதிக்கப்பட்டது. விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாயினர். மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துவந்தது. இந்நிலையில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வடகிழக்கு பருவமழை பெய்யத் துவங்கியுள்ளது. இடி, மின்னலுடன் கடந்த, ஐந்து நாட்களாக பலத்த மழை பெய்துவருகிறது. மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்வதால் நீர்நிலைகளில் மழை தண்ணீர் தேங்கத் துவங்கியுள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. இதனால் மகிழ்ச்சியடைந்துள்ள விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி பணிகளை துவக்கியுள்ளனர். உழவு, நாற்று பறித்தல், நடவு செய்தல் உள்ளிட்ட பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாவட்டம் முழுவதும் இந்த ஆண்டு, ஒரு லட்சத்து, 20 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படும் என வேளாண்மைத் துறையினர் எதிர்பார்க்கின்றனர்.

## "ஆத்மா' திட்டம் குறித்து விவசாயிகள் வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை

திருவூர்: "விவசாயிகள் மாற்றுப் பயிர் செய்தால், அவர்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும்' என, விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள் பங்கேற்ற, "ஆத்மா' ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட வேளாண் துறையும், திருவூரில் உள்ள வேளாண் அறிவியல் மையமும் இணைந்து, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டம் குறித்து, ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. இதில், மாவட்டத்தில், 14 ஒன்றியங்களில் இருந்து, 50 விவசாயிகள் பங்கேற்றனர். மாவட்ட வேளாண் துணை அலுவலர் ஜெயச்சந்திரன், வேளாண் பேராசிரியர்கள் முரளிதரன், மணிமாறன், முத்துராமலிங்கம், குமர பெருமாள் ஆகியோர் பங்கேற்று உழவியல், புதிய பயிர் வகைகள், தோட்டக்கலை பயிர் சாகுபடி என, பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

இதில், ""விவசாயிகள் நெற்பயிர், வேர்க்கடலை, வாழை என, ஒரே மாதிரியான பயிர்களை பயிர் செய்யாமல், சற்று வித்தியாசமாக மாற்றுப் பயிர்களை செய்ய முன்வர வேண்டும். இதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகள், ஆலோசனைகள் வழங்கப்படும்.

எந்த ஒரு பயிர் செய்வதற்கு முன்னாலும், முதலில் அந்த நிலத்தின் உள்ள மண்ணின் தன்மை குறித்து பரிசோதித்து அறிந்து கொள்ள வேண்டும். இதனால், தேவையற்ற கால விரயம், பண விரயம் தடுக்கப்படும். மண்ணில் உள்ள காரம், அமிலத் தன்மையை அறிந்து கொண்டு அதற்கு

ஏற்றார்போல் உரத்தை பயன்படுத்தலாம். சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாயம் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம், 40 முதல், 50 சதவீத தண்ணீர் செலவை மிச்சப்படுத்த முடியும். காய்கறி செடிகள் நடுவதற்கு முன், நிலத்தை உழும் போது உளி கலப்பையை கொண்டு உழ வேண்டும். இதனால், மண்ணில் வேர்கள் எளிதாக இறங்குவதோடு, மண்ணின் உள்ள நல்ல காற்றோட்டம் கிடைத்து, செடிகள் வளர்வதற்கு ஏற்றதாக அமையும். அதிக மகசூலும் கிடைக்கும்" என்று விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.

## கோமுகி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை துவக்கம்

கச்சிராயபாளையம்: கள்ளக்குறிச்சி கோமுகி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பதினாறாவது அரவை நேற்று துவங்கியது.விழாவையொட்டி நேற்று காலை 9 மணிக்கு கணபதி ஹோமம் நடந்தது. நிகழ்ச்சியில் அமைச்சர் மோகன், கலெக்டர் சம்பத், எம்.எல்.ஏ., அழகுவேல்பாபு ஆகியோர் அரவையை துவக்கி வைத்தனர். ஆலை ஆட்சியர் சிவமலர், ஒன்றிய சேர்மன்கள் ராஜசேகர், ராஜேந்திரன், கரும்பு விவசாய சங்கத்தலைவர் சிவ வடிவேல், பேரூராட்சி தலைவர் வெங்கடேசன், கள்ளக்குறிச்சி நகர் மன்ற சேர்மன் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். அ.தி.மு.க., நகர செயலாளர்கள் பாபு, கருப்பன் மற்றும் ஆலை ஊழியர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கரும்பு அறுவடை விறுவிறு சர்க்கரை ஆலையில் அரவைப்பணி துவக்கம்

நாமக்கல்: மோகனூர் சர்க்கரை ஆலையில், அரவைப் பணி துவங்கியதை தொடர்ந்து, காரவள்ளி பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்புகள், அரவைக்காக வெட்டி அனுப்பும் பணி, முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாமக்கல் அடுத்த மோகனூரில், சர்க்கரை ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த ஆலைக்கு, நாமக்கல், சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள எட்டு கோட்டங்களில் இருந்து, சாகுபடி செய்யப்பட்ட கரும்பு அறுவடை செய்து, அரவைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

நடப்பு அரவை பருவம், கடந்த, 1ம் தேதி துவங்கியது. துவங்கிய மூன்று மணி நேரத்தில், இயந்திரத்தின் பேரிங் கட்டானதால், அரவைப்பணி நிறுத்தப்பட்டது. பழுதடைந்த பேரிங் சரி செய்யும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டது. அதுவரை, தோட்டத்தில், கரும்பு வெட்டாமல் நிறுத்தி வைக்கப்பட்டது.

"கட்டிங் ஆர்டர்' பெற்றவர்கள், கடும் அவதிக்குள்ளாகினர். இந்நிலையில், ஆலையில் பழுதடைந்த பேரிங் சரி செய்யப்பட்டு, கடந்த, 12ம் தேதி, அரவைப்பணி மீண்டும் துவங்கப்பட்டது. அதை

தொடர்ந்து, "கட்டிங் ஆர்டர்' பெற்ற விவசாயிகள், தங்களது தோட்டத்தில் சாகுபடி செய்திருந்த கரும்புகளை வெட்டி, ஆலைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, சேந்தமங்கலம் அடுத்த ராமநாதபுரம்புதூர், வெண்டாங்கி, காரவள்ளியில் கரும்பு வெட்டும் பணி, முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்பட்ட கரும்புகள், லாரிகளில் ஏற்றி, மோகனூர் சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறது.

## நிலக்கடலை சாகுபடி முறை குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி துவக்கம்

நாமக்கல்: காதப்பள்ளி கிராமத்தில், நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, அதன் விதைப்பு துவங்கி, அறுவடை வரையிலான தொழில்நுட்பங்கள் குறித்து, பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டது.

ஐசோபாம் எண்ணெய் வித்து பயிர்களுக்கான திட்டத்தில், காதப்பள்ளி கிராமத்தில், நிலக்கடலை சாகுபடி செய்துவரும் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு நிலக்கடலை விதை விதைப்பு தொடங்கி, அறுவடை வரை, மொத்தம், 14 வகுப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகளில், அந்தந்த பருவத்தில் நிலக்கடலை சாகுபடியில் தேவையான தொழில் நுட்பங்களான விதை தேர்வு, விதை நேர்த்தி, உயிர் உரமிடல், உயிர் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல், தேவை அறிந்து உரமிடல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த களை கட்டுப்பாடு, நீர் வேளாண் மற்றும் அறுவடை உத்திகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை, ஐந்து வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. ஆறாவது வகுப்பில், வேளாண் உதவி இயக்குனர் ஜோதேடியாஸ் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் செல்வி, திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கினார். உயிரியல் பூச்சிக்கொல்லி உற்பத்தி மைய வேளாண் அலுவலர் ராணி, மண் மாதிரி எடுக்கும் முறை பற்றியும், அதன் அவசியம் குறித்தும் பேசினார்.

தொடர்ந்து, விவசாயிகள், ஆறு குழுக்களாக பிரிக்கப்பட்டு தனத்தனியே நிலக்கடலை தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் சேகரிக்கப்பட்டு செயல் முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

உதவி வேளாண் அலுவலர்கள் மலர்கொடி, செந்தில்குமார், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தொடர் மழைப் பொழிவு நடவுப் பணி விறுவிறுப்பு

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் சுற்றுவட்டாரத்தில் ஏற்பட்டு வரும் தொடர் மழைப்பொழிவால், விவசாயிகள், நடவுப் பணிகளை விறுவிறுப்பாக துவங்கியுள்ளனர். பள்ளிபாளையம் அதன் சுற்றுவட்டாரத்தில், ஒரு வாரமாக, தொடர் மழைப்பொழிவு ஏற்பட்டு வருகிறது. அதில் மகிழ்ச்சியடைந்த, பள்ளிபாளையம் சுற்றுவட்டார விவசாயிகள், விறுவிறுப்பாக நடவுப் பணியை துவக்கியுள்ளனர்.

குறிப்பாக, பள்ளிபாளையம் சுற்றுவட்டாரத்தில், சோளம் சாகுபடி பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கான நடவுப் பணியை, விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். குறுகிய கால பயிர் மற்றும் குறைந்த செலவில் போதிய லாபம் ஈட்ட முடியும் என்பதால், சோளம் பயிரிடுவதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

## வேளாண் விற்பனை சங்கத்தில் ரூ.60 லட்சத்துக்கு மஞ்சள்ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டையில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 60 லட்சம் ரூபாய்க்கு, மஞ்சள் ஏலம் நடந்தது.

நாமகிரிப்பேட்டையில், ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கம் உள்ளது. இங்கு, வாரந்தோறும் செவ்வாய்க் கிழமையன்று, மஞ்சள் ஏலம் நடப்பது வழக்கம். ஏலத்துக்கு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மட்டுமின்றி, சேலம், திருச்சி போன்ற மாவட்டங்களில் இருந்தும், விவசாயிகள் மஞ்சள் கொண்டு வருவது வழக்கம்.

இந்த வாரம் நடந்த ஏலத்தில், விரலி ரகம், அதிகப்பட்சமாக மூட்டை(100 கிலோ) ஒன்றுக்கு, 6,421 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக மூட்டை, 5,740 ரூபாய்க்கும் வியாபாரிகள் ஏலம் எடுத்துச் சென்றனர். குண்டு ரகம் அதிகபட்சமாக, 5,650 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக, 4,616 ரூபாயக்கும் ஏலம் போனது.

அதுபோல், பனங்காலி ரகம் அதிகப்பட்சமாக, 13 ஆயிரத்து, 900 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 11 ஆயிரத்து, 449 ரூபாய்க்கும் விலை போனது. இந்த வாரம் மட்டும் மொத்தம், 1,700 மூட்டைகள், 60 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## மானியத்தில் சான்று நெல் விதை

தேவதானப்பட்டி:பெரியகுளம் வட்டார விவசாய விரிவாக்க மையங்களில் சான்று பெற்ற நெல் விதைகள் மானிய விலையில் கிடைப்பதாக, விவசாய உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை பெரியகுளம் வட்டாரத்திரத்தில் சம்பா பருவத்திற்கு, ஏடிடி39,

ஏடிடிஆர் 45 சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகங்களாகும். சம்பா பருவத்தில் 2,400 எக்டேர் இயல் பாசனப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அரிசி உற்பத்தி திட்டம் மற்றும் விதைகிராமத்திட்டத்தில், கிலோவிற்கு 5 ரூபாய் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தேவதானப்பட்டி, வடுகபட்டி விவசாய விரிவாக்க மையங்களில் சம்பா பருவத்திற்கு ஏற்ற நடுத்தர வயதுடைய சன்னரகமான ஏடிடி39 ரக சான்று பெற்ற நெல்விதைகள் போதிய அளவு இருப்பு உள்ளது. மானிய விலையில் நெல்விதை வாங்கி விவசாயிகள் பயன்பெற வேண்டும்,என்றார்

## விவசாய பணிதீவிரம்

ஆர்.எஸ்,மங்கலம்:ஆர்.எஸ்.மங்கலத்தில் நேற்றுமுன்தினம் இரவில் தொடர் மழை பெய்ததால், 12 ஆயிரத்து 500 எக்டேர் நிலப்பரப்பில் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளது. ஆனந்தூர், சோழந்தூர், செங்குடி, புல்லமடை பகுதிகளில் விவசாயிகள் தீவிர பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## நெல்லை மாவட்டத்தில் கன மழை வீடுகள், வாழை பயிர்கள் சேதம்

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதால் பல்வேறு இடங்களில் வீடுகள் சேதமடைந்தது. வாழை உட்பட பயிர் வகைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அணைகளுக்கு நீர்வரத்தால் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

நெல்லை மாவட்ட பகுதிகளில் கடந்த ஒரு சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக பல்வேறு இடங்களில் மக்களின் சகஜ வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகமாகி நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

மாவட்டத்தில் தொடர் மழையால் ஒரு சில குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. பல பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரவும் இந்த மழை வழி வகுத்துள்ளது. இதனால் குடிநீர் பிரச்னைக்கு தற்காலிக தீர்வு கிடைத்துள்ளதால் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

வீடுகள் விழுந்தன: பலத்த மழையின் காரணமாக நேற்று முன்தினம் இரவில் மேலப்பாளையம் குறிச்சி சாந்தமூர்த்தி தெருவை சேர்ந்த ஆட்டோ டிரைவர் முருகன் என்பவரது ஓட்டு வீடு இடிந்து விழுந்தது. எனினும், வீட்டில் யாரும் இல்லாததால் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இதே போல், வீரமாணிக்கபுரம் சலவை தொழிலாளர் காலனியில் பனை மரம் சரிந்து விழுந்ததில் அப்பகுதியை சேர்ந்த பேச்சி என்பவரின் காம்பவுன்ட் சுவர் சேதமடைந்தது. மேலப்பாட்டம் அருகே உடையார்குளத்தில் ஐயப்பன் என்பவரது வீடும் மழையால் இடிந்து விழுந்தது.

வாழைகள் சேதம்:

இடி, மின்னலுடன் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்ததால் பல்வேறு பகுதிகளில் மரங்களும் விழுந்தன. தருவை பகுதியில் நூற்றுக்கணக்கான வாழைகள் சேதமடைந்தன. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக வீடுகளும், மரங்களும் சேதமடைந்தன. சில இடங்களில் மின் வயர்கள் அறுந்து விழுந்தன.

மாவட்டத்தில் மழையால் சேதமடைந்த வீடுகள் மற்றும் விவசாய பயிர்கள், உயிர் பலிகள் குறித்து வருவாய்த் துறையினர் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பணிகளை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடரும் மழை:

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை நேற்றும் காலை முதல் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் மழை பெய்த வண்ணம் இருந்தது. நெல்லை, பாளை, தச்சநல்லூர், சங்கர் நகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மதியத்திற்கு பிறகு வழக்கம் போல் மழை பெய்தது.

ஒரு சில இடங்களில் மின்னலுடன் பலத்த காற்றுடன் கூடிய கன மழையும் பெய்ததை காண முடிந்தது. தொடர்ந்து மாவட்டத்தின் பல இடங்களிலும் இரவிலும் மழை பெய்த வண்ணம் இருந்தது. நேற்றைய நிலவரப்படி மாவட்டத்தில் மேலும் ஒரு சில நாட்கள் மழை நீடிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

கொசு மருந்து:

மழையின் காரணமாக கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் வகையில் மாநகராட்சி சார்பில் பல்வேறு இடங்களில் கொசு மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. இப்பணியில் மாநகராட்சி சுகாதார துறை அலுவலர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் ஒரு சில பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. இந்நோய் பரவாமல் தடுக்க அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொற்று நோய்கள்:

இந்த தொடர் மழையின் காரணமாக பல்வேறு இடங்களில் மழை நீர் தேங்கிய வண்ணம் உள்ளது. இதனால் சுற்றுப்புற சுகாதாரம் பாதிக்கப்பட்டு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் நிலவுகிறது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகின்றனர்.

## விளைநிலங்களில் நிலத்தடிநீர் உறிஞ்சி எடுக்கப்படுவதால் ஒட்டு மொத்த விவசாயம் பாழாகிறது

தூத்துக்குடி : நிலத்தடி நீர் போர் போட்டு உறிஞ்சி எடுக்கப்படுவதால் தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயமே முற்றிலுமாக பாழாகிவிடும் என்று ஒட்டு மொத்த விவசாயிகள் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் புகார் தெரிவித்தனர்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் நடந்தது. பொதுப்பணித்துறை தாமிபரணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேனாண்மை) கனகராஜ் வரவேற்றார். பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கெங்காதரன், உதவி பொறியாளர்கள் ரகுநாதன், வினோத்குமார், கோரம்பள்ளம் வடிநில கோட்ட உதவி பொறியாளர் செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் ராமலிங்கம், ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் ராஜேஸ்வரி, வேளாண்மை துணை இயக்குனர் சீனிவாசன், மாசுகட்டுப்பாடு வாரிய அலுவலர் ரவிக்குமார், வேளாண்மை அலுவலர் தாமஸ் மற்றும் மாவட்டத்தில் உள்ள அரசுத்துறை அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை துவக்கி வைத்து மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் பேசுகையில், நிலத்தடி நீரை சேமிக்க வேளாண்மைத்துறையும், ஊரக வளர்ச்சித்துறையும் இணைந்து செயல்திட்டம் ஒன்றை தயாரித்துள்ளனர். இந்த திட்டத்தின் மூலம் நிலத்தடி நீர் நன்றாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் இந்த திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இந்த திட்டத்தை விவசாயிகள் இந்த ஆண்டு செயல்படுத்தி பார்த்தால் அடுத்த ஆண்டு இதே நேரத்தில் இதற்கான பயன் தெரிந்துவிடும். இதனால் விவசாயிகள் முழுமையாக இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக பரவலாக மழை பெய்துள்ளது. இந்த மழை விளாத்திகுளம், புதூர் பகுதியில் பெய்யவில்லை. நிலத்தடி நீரை சேமிக்க எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.இதனை தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் அறிவித்தும் விளை நிலங்கள் உள்ள பகுதியில் இருந்து நிலத்தடி நீர் போர் போட்டு லாரி, லாரியாக உறிஞ்சி எடுக்கப்பட்டு தனியார் ஆலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாக விவசாய சங்க நிர்வாகிகள் கந்தசாமி, தமிழ்மணி, ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் அதிகமானோர் எழுந்து நின்று பேசினர்.

ஒட்டு மொத்த விவசாயமே இதன் மூலம் பாழாகி போய்விடும் என்று அவர்கள் கூறினர். இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதற்கு பதில் அளித்த கலெக்டர் தற்போது போர்களில் லாரி மூலம் தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டன என்றார். நான் இப்போது கூட்டத்திற்கு வரும் போது பார்த்தேன். நல்லூர் பகுதியில் 15க்கும் மேற்பட்ட லாரிகள் தண்ணீர் எடுப்பதற்கு நின்று

கொண்டிருப்பதாக கலெக்டர் கூறினார்.திருச்செந்தூர் பகுதியிலும் லாரிகள் மூலம் தண்ணீர் எடுப்பது வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் உள்ள போர்களில் ஒரு லாரியும், சில இடங்களில் இரண்டு லாரியும், சில இடங்களில் மூன்று லாரியும், சில இடங்களில் நான்கு லாரியும், சில இடங்களில் 5 லாரிகள் மட்டுமே தண்ணீர் எடுக்க முடியும். ஐந்து லாரிக்கு மேல் எந்த இடத்திலும் தண்ணீர் எடுக்க அனுமதி கிடையாது. அதுவும் வி.ஏ.ஓவிடம் அனுமதி பெற்று சென்ற பிறகு தான் தண்ணீர் எடுக்க முடியும். அந்த அளவிற்கு இதில் கடுமையான கண்டிப்புகள் விதிக்கப்பட்டிருப்பதாக கலெக்டர் தெரிவித்தார்.
புறம்போக்கு இடங்களில் போர் மூலம் லாரி தண்ணீர் எடுப்பது குறித்த உரிமை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார். எந்த காரணம் கொண்டும் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் செல்ல அனுமதிக்க கூடாது என்று விவசாயிகள் வலியுறுத்தினர். பவர் பிளான்டிற்கு தண்ணீர் கொடுத்து தான் ஆகவேண்டும். மின்சாரமும் நமக்கு முக்கிய தேவையாக இருக்கிறது என்று கலெக்டர் தெரிவித்தார்.இதனை தொடர்ந்து கரும்பு விவசாயிகள் பலர் தனியார் கரும்பு ஆலை கரும்பை வெட்டிச் சென்று நான்கு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படவில்லை என்று பல விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கரும்பு ஆலை டெபுடி ஜெனரல் மானேஜர் நடராஜன் இம் மாத இறுதிக்குள் பணம் அனைத்தும் விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டு விடும் என்றார். மொத்தம் 410 விவசாயிகளுக்கு 44 லட்ச ரூபாய் பாக்கி இருக்கிறது. இம் மாத இறுதிக்குள் அவை வழங்கப்பட்டு விடும் என்று உறுதியளித்தார். இதோடு அந்த பிரச்னை முடிந்தது.கடம்பாகுளத்தை தூர் வார வேண்டும் என்றும், அதில் ஓடை 50 மீட்டராக இருந்து தற்போது 15 மீட்டராக சுருங்கிவிட்டது. அந்த அளவிற்கு ஆக்கிரமிப்பு இருக்கிறது. அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகு இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் அந்த ஆக்கிரமிப்பினை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன.முதலில் ஓடையை சுற்றியுள்ள முட்செடிகளை அகற்றி தண்ணீர் செல்ல ஏற்பாடு செய்யுமாறும், மற்ற பணிகளை மழைகாலம் முடிந்த பின்னர் செய்யுமாறும், ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது கிரிமினல் ஆக்ஷன் எடுக்குமாறு கலெக்டர் உத்தரவிட்டார். உடனடியாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக எஸ்.டி.ஓ கெங்காதரன் தெரிவித்தார்.
பின்னர் முடிவைத்தானேந்தலை சேர்ந்த விவசாய குடும்பத்தை சேர்ந்த பெண்கள் பலர் பட்டா கேட்டு கலெக்டரை சந்தித்து பட்டா கேட்டு மனு அளித்தனர். அரசு விதிகளின்படி பட்டா வழங்க ஏற்பாடு செய்வதாக கலெக்டர் தெரிவித்ததை தொடர்ந்து அவர்கள் சென்றனர்.கடம்பூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி நவநீதன் தெரிவித்தார். கயத்தார், கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம் பகுதி விவசாயிகளுக்கு இதன் மூலம் பயன் கிடைக்கும் என்றார். நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகளிடம் கலந்து பேசி, தேவை இருந்தால் உடனடியாக அங்கு நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை, காற்றினால் வாழவல்லான்,

உமரிக்காடு, மேல ஆத்தூர் பகுதியில் உள்ள வாழைகள் சாய்ந்து விட்டதாகவும், விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தனர். தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், வருவாய்துறை அதிகாரிகள் ஆய்வு செய்ய கலெக்டர் உத்தரவிட்டார்.வாழைகள் பாதிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். அதே சமயம் பயிர்காப்பீடு திட்டத்தில் சேராத விவசாயிகள் சேர வேண்டும். பிரிமியம் செலுத்தினால் நஷ்டஈடு தொகையை முழுமையாக பெறலாம் என்றும் கலெக்டர் கூறினார்.கூட்டுறவு சங்க தேர்தல்கள் வர உள்ளதால் ஆளும் கட்சியான அதிமுகவினர் உறுப்பினர்களை சேர்ப்பதற்கு அராஜகம் செய்கின்றனர். அவர்களுக்கு வேண்டியவர்களை மட்டுமே சேர்த்து தில்லுமுல்லு செய்வதாக விவசாயிகள் பலர் புகார் தெரிவித்தனர். ஆனால் இதற்கு கலெக்டர் எந்த பதிலும் தெரிவிக்கவில்லை.

## விவசாயிகள் சங்க கூட்டம்

வில்லுக்குறி : வில்லுக்குறியில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் குருந்தன்கோடு ஒன்றியக்குழுவின் பேரவைக்கூட்டம் நடந்தது. சங்க தலைவர் ராமச்சந்திரன் தலைமை வகித்தார். ஐயப்பன்பிள்ளை வரவேற்றார். மாவட்ட துணைத்தலைவர் ஆறுமுகம்பிள்ளை, வில்லுக்குறி பஞ்., தலைவர் விஷ்ணு, சி.ஐ.டி.யூ., நிர்வாகி சின்னான்பிள்ளை பேசினர். பின்னர் புதிய நிர்வாகிகளாக ராமச்சந்திரன் தலைவராகவும், கவுசல்யா துணைத்தலைவராகவும், விஜி செயலராகவும், பால்ராஜ் துணைசெயலராகவும், ராமேஸ்வரன் பொருளாளராகவும், உறுப்பினர்களாக மணி, சுதாகர் மாதேவன்பிள்ளை, சிலுவைமுத்து, மணிகண்டன், ஹரிஹரன், ராஜம், ராஜேந்திரன், ஐயப்பன், விஷ்ணு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் வில்லுக்குறி பகுதியில் வன விலங்குகளால் குறிப்பாக குரங்கு, காட்டுப்பன்றிகளால் விவசாய பயிர்கள் நாசப்படுவதை தடுத்திடவும், பாதிக்கப்பட்ட பயிருக்கு நஷ்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்தைக்கேட்டுக் கொள்வது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

18.10.2012 P.M

19.10.2012 A.M

## டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி நடவு மும்முரம்



தஞ்சை : காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான நடவுப்பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக ஆண்டுதோறும் மேட்டூரிலிந்து ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படும். ஆனால், பருவமழை பொய்த்ததாதலும், மேட்டூர் நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததாலும் இந்த ஆண்டு மேட்டூர் அணையில் குறிப்பிட்ட அளவு நீர்மட்டம் உயராததால் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால் காவிரி நீரை நம்பி குறுவை சாகுபடி பணிகளை தொடங்கிய விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகினர்.

மேட்டூரில் நீர் திறக்கப்படாததாலும், பருவ மழை பெய்யாததாலும் டெல்டா மாவட்டங்களில் குறிப்பிட்ட அளவில் குறுவை சாகுபடி இலக்கை எட்ட முடியவில்லை. இதனால் குறுவை சாகுபடி இழப்பை ஈடுகட்டும் வகையிலும், சம்பா சாகுபடி இலக்கை எட்டுவதற்காக சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

Ôதஞ்சை மாவட்டத்தில் இதுவரை நேரடி நெல் விதைப்பு மூலம் சுமார் 10 ஆயிரம் ஏக்கரும், இதர முறைகளில் சுமார் 17 ஆயிரம் ஏக்கரிலும் நடவுப்பணி முடிந்துள்ளது. பருவ மழை தொடங்குவதற்குள் நடவு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டால் தான் பயிர்களை காப்பாற்ற முடியும் என்பதால் தற்போது டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான நடவு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறதுÕ என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் முகமது யாஹியா தெரிவித்தார்.

5 மாவட்டங்களில் 4.20 லட்சம் ஹெக்டேர் பயன்: காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த மாதம் 21ம் தேதி கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதன் மூலம் தஞ்சை மாவட்டத்தில் 1.25 லட்சம் ஹெக்டேர், திருவாரூர் மாவட்டத்தில் 1.35 லட்சம் ஹெக்டேர், நாகை மாவட்டத்தில் 1.20 லட்சம் ஹெக்டேர், புதுக்கோட்டை மாவட்டத்தில் 8,400 ஹெக்டேர், கடலூர் மாவட்டத்தில் 32,388 ஹெக்டேர் என 4 லட்சத்து 20 ஆயிரத்து 788 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

8,000 கனஅடி

பருவமழையால், காவிரி டெல்டா பகுதிகளில் பாசனத்துக்கான நீரின் தேவை குறைந்துள்ளது. இதையடுத்து மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 15 ஆயிரம் கன அடியாக இருந்த நீர் திறப்பு, நேற்று மாலை விநாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.
அணைக்கு நேற்று மாலை வினாடிக்கு 7,489 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.
அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 62.90 அடியாக இருந்தது. நீர் இருப்பு 26.89 டிஎம்சி.

## குன்னூர் ஏல மையத்தில் டீத்தூள் விலை உயர்வு



குன்னூர் : நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் ஏல விற்பனை நடைபெற்றது. இலை ரகம் 2 லட்சத்து 66 ஆயிரத்து 628 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 91 ஆயிரத்து 635 கிலோ என மொத்தம் 3 லட்சத்து 58 ஆயிரத்து 363 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. ஏலத்தில் உள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். 90 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து ரகத்திற்கும் கிலோ ரூ.2 வரை உயர்ந்தது. கணிசமாக விலை கிடைத்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை இறக்குமதி வரி உயர்கிறது



புதுடெல்லி : மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியதாவது: சர்க்கரை இறக்குமதி தொடர்பாக இரு திட்டங்கள் உள்ளன. முதலாவது சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை இறக்குமதிக்கு 20% வரி விதிப்பது இரண்டாவது கச்சா சர்க்கரைக்கு 10% வரியை ரத்து செய்வது. இவை குறித்து விவசாயம் மற்றும் வணிகத் துறை அமைச்சகங்களிடம் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடுத்த 15 நாட்களுக்குள் இது அமைச்சரவை குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

தற்போது நாட்டின் சர்க்கரை உற்பத்தி போதுமானதாக உள்ளது. 2012,13ம் ஆண்டின் அக்டோபர் , செப்டம்பர் இடைப்பட்ட காலத்தில் 2.35 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு உற்பத்தியான 2.6 கோடி டன்னைவிட இது குறைவாகும். கடந்த ஆண்டு சர்க்கரை பயன்பாடு 2.2 கோடி டன்னாகவும், ஏற்றுமதி 35 லட்சம் டன்னாகவும் இருந்தது என்றார்.

## தொழிலாளர் ஸ்டிரைக் வாபஸ் பால்வெட்டும் பணி துவக்கம்



நாகர்கோவில் : அரசு ரப்பர் கழக தொழிலாளர்கள் நேற்று பணிக்கு திரும்பிய நிலையில், ரப்பர் பால் வெட்டும் பணி மீண்டும் தொடங்கியுள்ளது. குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தின் கீழ் 2500 தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். இவர்கள் ஊதிய உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஜூலை 16ம் தேதி முதல் 3 மாதமாக வேலைநிறுத்தம் செய்தனர். பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைக்கு பின், 16ம் தேதி ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதையடுத்து, அனைத்து தொழிலாளர்களும் நேற்று காலை பணிக்கு திரும்பினர். அரசு ரப்பர் கழகத்தில், கீரிப்பாறை, மணலோடை, மயிலாறு, கோதையாறு, சிற்றார் ஆகிய 5 கோட்டங்களின் கீழ் 9 பிரிவுகள் செயல்பட்டு வருகிறது. நீண்ட நாட்களாக பால்வெட்டப்படாமல் இருந்ததால் 15 நாட்களுக்கு உற்பத்தி முழுமையாக இருக்காது. அதன் பின்னரே, ரப்பர் மரத்தில் இருந்து பால் வடிய தொடங்கும். பின் ரப்பர் ஷீட்கள் உற்பத்தி தொடங்கும்.

19th oct 2012 P.M

## நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உருளை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஆலோசனை

திண்டுக்கல்,: உருளைக்கிழங்குக்கு வரும் மாதங்களில் நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் உருளைக்கிழங்கை பயிரிட்டு பயனடையலாம் என்று மாவட்ட வேளாண் வணிகத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இது குறித்து வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் சாரநாத்பாபு கூறியதாவது:

உருளைக்கிழங்கு உலகின் தானியமில்லாத உணவுப் பொருள் வரிசையில் முதலிடம் வகிக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் பகுதிகளில் கடைப்போக உருளைக்கிழங்கு

செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விதைப்பு செய்து டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. விவசாயிகள் கடைப்போக விதைப்பு முடிவுகளை எடுப்பதற்கு உருளைக்கிழங்கு அறுவடையின்போது கிடைக்கும் விலை நிலவரம் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். உருளைக்கிழங்கு அறுவடையின்போது டிசம்பர்-12, ஜனவரி-13ல் கிலோவிற்கு ரூ.20 முதல் ரூ.22வரை விலை கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விலையைக் கருத்தில்கொண்டு கடைப்போக உருளைக்கிழங்கை சாகுபடி செய்யலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

திண்டுக்கல்,: திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 19ம் தேதி (நாளை) காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. இதில் கடந்த கூட்டத்தில் கொடுக்கப்பட்ட மனுக்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. துரித நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இரண்டு நகல்களில் மனுக்கள் அளிக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்துகொண்டு விவாதத்தில் பங்கேற்க உள்ளதால் விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டு விவசாயம் தொடர்பான புகார்களை தெரிவிக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## மண்புழு உரக்கூடம் அமைக்க ரூ.15 ஆயிரம் மானியம்

திருப்பூர்,: மண்புழு உரக்கூடம் அமைக்க விவசாயிகளுக்கு அரசு ரூ.15 ஆயிரம் மானியம் வழங்குகிறது.

இயற்கை உரப் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையில் மண்புழு உரத்தை அதிக அளவில் உற்பத்தி செய்து சாகுபடி பயிர்களுக்கு இடுவதை அதிகரிக்க அரசு பல்வேறு மானியத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், தற்போது தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2012-13ம் ஆண்டில் மண்புழு உரத்தொட்டிக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் விண்ணப்பித்து முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

அவ்வாறு பதிவு செய்த விவசாயிகள் உரக்குழி அமைத்தவுடன் அதிகாரிகள் ஆய்வு செய்து தகுயுடையவர்களுக்கு மானியத்தொகையை வழங்குவர்.

இந்த மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கு மூலம் வழங்கப்படும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.10.2012 A.M**

**மாநில வேளா மை விற்பனை வாரியம் சார்பில்
விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

தமிழ்நாடு வேளா மை விற்பனை வாரியம் சார்பில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம் அளிக்க படுகிறது.

பின்செய் நேர்த்தி பயிற்சி

தமிழக வேளா மை விற்பனை வாரியத்தால் மதுரை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கான அறுவடை பின்செய் நேர்த்தி பற்றிய பயிற்சி வழங்க பட்டது. வேளா மை துணை இயக்குநர் சி.மூர்த்தி பயிற்சியை தொடங்கி வைத்தார். மேலும் வேளா மை விற்பனை துறையின் மூலம் செயல்படுத்த படும் திட்டங்களான விளைபொருள் குழுக்கள் அமைத்தல், சந்தை உட்கட்டமை பு வசதிகளை ஏற்படுத்துதல், விற்பனை ஒருங்கிணை பு, வேளா ஏற்றுமதி ம டலங்கள் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல், உணவு பத படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவ ஊக்குவித்தல், உணவு பொருட்களின் இழ பை குறைக்கவும் வேலை வாய் பை பெருக்கும் முயற்சிகள் பற்றி எடுத்துக் கூறினார்.

விற்பனைக் கூடத்தின் செயல்பாடுகள் பற்றி ம், பொருளீட்டு கடன் 5 சதவீத வட்டியில் பெறும் முறைகள், உழவர் நலத்திட்டம் மற்றும் வேளா பொருட்களின் விலை குறைவாக இருக்கும் போது விற்பனைக் கூடத்தில் இரு பு வைத்து பின்னர் நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்வது குறித்து மதுரை விற்பனைக் குழு செயலாளர் தவசுமுத்து விளக்கினார்.

கல பட உணவு

நெல், உளுந்து, பயறு வகைகள், மக்காச் சோளம், நிலக்கடலை, எள், பருத்தி, மிளகாய் பயிர்களில் அறுவடை பின்செய் நேர்த்தி தொழில் நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை கையாளும் போது அறுவடைக்கு பிறகு ஏற்படும் சேதத்தை பெருமளவு குறைக்கலாம் எனவும் வேளா மை உதவி இயக்குநர் பழ.அருணாசலம் கூறினார். வேளா மை அலுவலம் மெர்சி ஜெயராணி அக்மார்க் விழி புணர்வு குறித்தும், கல பட உணவு பொருட்களை எளிதாக க டு பிடிக்கும் வழிகள் குறித்தும் பேசினார்.